மக்கள் பயன்பெறவேண்டும் என்ற கருத்தில், கிராம மக்களின் நலனைக் கருதி, சிறிய பேருந்துகளை, நகர்புறங்களோடு கிராமப் புறங்களோடு இணைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு மினி பஸ்கள் விடுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதற்காகத்தான் இதற்கு 50 ரூபாய் டாக்ஸ் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் நஷ்டம் வராது என்று நம்புகிறேன்.

(திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எழுந்திருந்தார்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முழுவை மாவட்டத்தை பற்றியது. ஆகவே தொடர்புடைய கேள்வியாக கேளுங்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இந்த மினி பஸ்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் விடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால்தான் நான் கேள்வி கேட்க முன்வந்தேன் என்பதை தலைவர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு வட்டங்களில் இந்த மினி பஸ்கள் விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது போதாது, மேலும் பல தாலூகாக்களில் இது தேவைப்படுகிறது, டிமாண்ட் அதிகமாக இருக்கிறது. இதை அனுமதித்தால், நமக்கும் வருமானம் வரும், மக்களுக்கும் வசதியாக இருக்கும். ஆகவே இதை விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா? அரசாங்கத்திற்கும் இதனால் நன்மை உண்டாகும் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு வட்டங்களில் இப்போது நடைமுறையில் இருந்து வருகிறதாயினும், ஏனைய இடங்களுக்கு இந்த மினி பஸ் விடுவது பற்றி ஆய்வு நடந்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் எழுந்திருந்தார்......)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு கட்சிக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் எல்லோருக்கும் கொடுக்க நேரம் இருக்காது. சில நேரங்களில் தவறியும் இருக்கலாம். அடுத்த கேள்வி...........

பால்வள நிறுவன ஊழியர்களது ஊதியங்கள்.

546. வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு பால்வள கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு வேலைத் தன்மை அடிப்படையில் புதிய ஊதிய விகிதம் நிர்ணயிக்கும்படி அரசுக்கு, மதுரை பால்பண்ணை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

1978 மார்ச் 13]

(ஆ) ஆமெனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதம், அரசாங்க ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியத்தை தழுவியுள்ளது. ஆகவே, தற்போது தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு தனியாக ஊதியத்தை மாற்றி அமைக்கத் தேவை இல்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் புதிய அணைக்கட்டுகள்.

*547. வினா—திரு கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஓடும் ஆற்றுத் தண்ணீரை வீணாக்காமல் சிறு அணைக்கட்டுகள் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஆறுகளின் குறுக்கே கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம். மலைக் குன்றுகளின் வட்டார முன்னேற்றத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ஓடும் ஆறுகளின் குறுக்கே 13 சிறு அணைகள் கட்டும் திட்டம் 1975–76ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த அணைக்கட்டுகள் அனைத்தும் நீலகிரி பகுதியில் ஓடுகிற காட்டாறுகளின் குறுக்கே கட்டப்படுகின்றன. இக் காட்டாறுகள் பல பகுதிகளிலிருந்து ஓடிவந்து முடிவில் மோயார் ஆறு அல்லது பவானி ஆற்றில் கலக்கின்றன. மலைப்பகுதியில் உள்ள சிறிய பள்ளத்தாக்குகளிலிருந்து பெருகி வருகின்ற பெரும் பாலான இந்த காட்டாறுகளுக்கு குறிப்பிட்ட பெயர் எதுவும் இல்லை.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சிறிய சிறிய காட்டாறுகள் ஓடுகின்ற இடங்களில் அந்தந்த கிராமங்களுக்கு பயன்படும் வகையில் அந்த ஆற்றிலிருந்து நீரை ஏற்றி அங்குள்ள மக்களுக்கு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 13 செக்டாம்-களுக்கான திட்டங்கள் இருப்பதாக ஏற்கெனவே என் பதிலில் சொன்னேன். அவைகள் எல்லாம் அந்தந்த